2017 ஜூலை 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–45 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

61. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 10–11–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 109–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

62. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 10–11–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 110–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

63. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறையின் 9–3–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 41–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

64. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையின் பகுதி–B–ல் பதிவு 68–ன்கீழ், தானியங்கி வங்கி இயந்திரம் (ATM) மற்றும் பணம் விநியோகிக்கும் இயந்திரத்தினை (Cash Dispenser) தகவல் தொழில்நுட்பப் பொருட்களாக அறிவித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B2) துறையின் 15–5–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 39–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

65. இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை அல்லது இறக்குமதி செய்யப்பட்ட கச்சா சர்க்கரையிலிருந்து எடுக்கப்பட்ட சர்க்கரை மற்றும் பிற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட அல்லது மாற்றம் செய்யப்பட்ட சர்க்கரை நீங்கலாக, 1–11–2014 அன்று இறுதி சரக்கு இருப்பில் உள்ள சர்க்கரையை ஈட்டு எடுக்க பிழியப்பட்ட கரும்பின் அளவின்மீது, மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளால் இறுதி கொள்முதல் முனையில் செலுத்தத்தக்க வரியினை, அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 15–5–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 40–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

66. 2007–2008, 2008–2009, 2009–2010 மற்றும் 2010–2011 ஆகிய வரிக்கணிப்பு ஆண்டுகள் பொறுத்தவரை பகுதியாக இயந்திரம் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள் உள்ளடங்கலான கையினால் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகள் உற்பத்தியாளர்களுக்கு வணிகர்களால் விற்கப்பட்ட மரக்குச்சிகள் மற்றும் மரப்பட்டைகள்மீது செலுத்தத்தக்க வரி மற்றும் தண்டத் தொகை ஆகியவற்றைத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B2) துறையின் 22–5–2017 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 44–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2017 ஜூலை 19]

67. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொது மற்றும் சமூகப் பிரிவு). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

68. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் பிரிவு). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

69. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (உள்ளாட்சி அமைப்புகள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

70. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொதுத் துறை நிறுவனங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

71. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பொருளாதாரப் பிரிவு). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

72. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நிதிநிலை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

196. 2015–2016 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

197. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

198. மானியக் கோரிக்கை எண் 38–பொது (தேர்தல்கள்) துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

199. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

200. மானியக் கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

201. மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

202. மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2017–2018. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

203. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2017–2018. (தமிழ்)

* * * * *